# அமைச்சரவை அலுவலகம்

# செயலாற்றுகை அறிக்கை

# 2015

குடியரசு சதுக்கம், சேர் பாரோன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு - 01.
www.cabinetoffice.gov.lk

# அமைச்சரவை அலுவலகம்



**"குடியரசின் நல்லாட்சியின் நெறிப்படுத்தலுக்காக நிறைவேற்றுநருக்கு ஒத்துழைப்பு நல்கும் நம்பத்தகு அரசாங்க நிறுவனமாதல் "**

## பொருளடக்கம்


1. **அறிமுகம்**
    - 1.1 தொலைநோக்கு
    - 1.2 செயற்பணி
    - 1.3 குறிக்கோள்
    - 1.4 செயற்பாடுகள்
2. **அமைச்சரவை அலுவலகமும் அதன் பணிகளும்**
    - 2.1 அமைச்சரவைக் கூட்டங்களுக்குரிய பணிகள்
    - 2.2 அமைச்சரவை உபகுழு கூட்டங்களுக்குரிய பணிகள்
    - 2.3 பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து சிபாரிசுகளைச் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையினால் நியமனம் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் குழுக்களுக்குரிய பணிகள்
    - 2.4 அதிமேதகைய சனாதிபதியினால் அல்லது அமைச்சரவையினால் கையளிக்கப்படும் விசேட பணிகள்
    - 2.5 அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் பல்வேறுபட்ட அறிக்கைகளை தயாரித்தல் தொடர்பிலான வழிகாட்டல்களை வழங்குதல்
    - 2.6 விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய அமைச்சரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான தொடர் நடவடிக்கைகள்
    - 2.7 அமைச்சுக்களுடனும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுடனும் நெருங்கிய கூட்டிணைப்பினைப் பேணுதல்
3. **அமைச்சரவை அலுவலகத்தின் பல்வேறுபட்ட பிரிவுகளும் அவற்றுக்கு கையளிக்கப்பட்டுள்ள பணிகளும்**
    - 3.1 விஞ்ஞாபனப் பிரிவு
    - 3.2 நிகழ்ச்சிக் குறிப்புக்களைத் தயாரிக்கும் மற்றும் மொழிபெயர்ப்புப் பிரிவு
    - 3.3 கணனிப் பிரிவு
    - 3.4 தாபன மற்றும் சேவைப் பிரிவு
    - 3.5 கணக்குப் பிரிவு
4. **2015 ஆம் ஆண்டில் அமைச்சரவை அலுவலகத்தின் செயலாற்றுகை**
    - 4.1 அமைச்சரவைக் கூட்டங்களுக்குரிய பணிகள்
    - 4.2 அமைச்சரவை உபகுழுக்களுக்குரிய பணிகள்
    - 4.3 பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்படுவதற்காக அமைச்சர வையினால் நியமனம் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் குழுக்களுக்குரிய பணிகள்
    - 4.4 மீயுயர் நீதி மன்றங்களினால் விசாரிக்கப்பட்டுவரும் வழக்கு நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் தகவல்களையும் அமைச்சரவைத் தீர்மானங்களையும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்
    - 4.5 2015 ஆம் ஆண்டில் முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய பணிகள்
5. **அமைச்சரவை அலுவலக பணிகளின் தனித்துவம்**
6. **மனிதவள முகாமைத்துவம்**
    - 6.1 2015-12-31 ஆம் திகதியன்றுக்கான பதவியணி பற்றிய விபரங்கள்
    - 6.2 2015-12-31 திகதியன்றில் இருந்தவாறான பதவியினர்கள்
    - 6.3 2015 ஆம் ஆண்டில் அமைச்சரவை அலுவலகத்திற்கு புதிதாக சேர்ந்த உத்தியோகத்தர்கள்
    - 6.4 ஓய்வுபெறல்
    - 6.5 இடமாற்றம்
    - 6.6 பயிற்சியும் அபிவிருத்தியும்
7. **நிதி மற்றும் கணக்குப் பணிகளின் மீளாய்வு**
    - 7.1 மதிப்பீடு
    - 7.2 உத்தியோகத்தர்களுக்காக கடன் முற்பணங்களை வழங்குதல்
    - 7.3 வருடாந்த கணக்குகளைச் சமர்ப்பித்தல்
    - 7.4 வருடாந்த பொருட்களின் அளவை ஆய்வு
    - 7.5 கணக்காய்வு விசாரணைகள்

**இணைப்புகள்**

| | | |
|---|---|---|
| இணைப்பு I (அ) | - | 2015-01-08 ஆம் திகதியிலிருந்து 2015-08-17 ஆம் திகதிவரை அமைச்சுக்கள் ஒவ்வொன்றினாலும் அமைச்சரவை அலுவலகத்திற்கு தொடர்புபடுத்திய அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் |
| இணைப்பு I (ஆ) | - | 2015-08-17 ஆம் திகதியிலிருந்து 2015-12-31 ஆம் திகதிவரை அமைச்சுக்கள் ஒவ்வொன்றினாலும் அமைச்சரவை அலுவலகத்திற்கு தொடர்புபடுத்திய அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் |
| இணைப்பு II (அ) | - | 2015-08-01 ஆம் திகதியின் பின்னர் 2015-08-17 ஆம் திகதிவரை அமைச்சர்களாக செயலாற்றிய அமைச்சரவையின் உறுப்பினர்கள் |
| இணைப்பு II (ஆ) | - | 2015-08-17 ஆம் திகதியன்றின் பின்னர் அமைச்சர்களாக செயலாற்றும் அமைச்சரவையின் உறுப்பினர்கள் (2015 ஆம் ஆண்டு இறுதிவரை) |
| இணைப்பு III | - | ஒதுக்கீட்டுக் கணக்கு - 2015 |
| இணைப்பு IV | - | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான 'B' முற்பணக் கணக்கின் இணக்கக் கூற்று - 2015 |
| இணைப்பு V | - | அமைச்சரவை அலுவலகத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு கணக்கு தொடர்பிலான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை. |

# அமைச்சரவை அலுவலகம்

## செயலாற்றுகை அறிக்கை - 2015

### 1. அறிமுகம்

#### 1.1 தொலைநோக்கு

குடியரசின் நல்லாட்சியின் நெறிப்படுத்தலுக்காக நிறைவேற்றுநருக்கு ஒத்துழைப்பு நல்கும் நம்பத்தகு அரசாங்க நிறுவனமாதல்.

#### 1.2 செயற்பணி

அரசியலமைப்பின் 42 ஆம் உறுப்புரையின் (1) ஆம் துணை உறுப்புரையிலுள்ள நியதிகளின் பிரகாரம் அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டுள்ள குடியரசின் நல்லாட்சிக்கான நெறிப்படுத்தலுக்கு இந் நல்லாட்சி தொடர்பிலான ஆணைக்குரிய பணிகளை நிறைவேற்றும் போது அமைச்சரவையினால் தீர்மானத்தை எடுக்கும் செயற்பாட்டுக்குத் தேவையான சகல ஒத்துழைப்புகளையும் வினைத்திறனுடன் நல்குதல்.

#### 1.3 குறிக்கோள்

அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற பிரேரிப்புகள் தொடர்பிலும் அமைச்சரவையினால் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்ற பிற முக்கிய விடயங்கள் தொடர்பிலும் அவற்றின் கொள்கைகள் மற்றும் சட்ட உட்சிக்கல் தொடர்பில் சிறந்த புரிந்துணர்வுடன் தேசத்தின் நலன்கருதி பொருத்தமான தீர்மானங்களை எடுப்பதற்கு இயலச் செய்யும் பொருட்டு அமைச்சரவைக்கும் அமைச்சரவை உபகுழுக்களுக்கும் தேவையான ஆகக்கூடிய ஒத்துழைப்பை வழங்குதல்.

#### 1.4 செயற்பாடுகள் :

(i) அமைச்சுக்களுக்கு அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தயாரித்தல் மீது காலத்துக்கு காலம் அறிவுறுத்துரைகளை வழங்குதலும் இது தொடர்பில் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் சிரேட்ட உத்தியோகத்தர்களுக்கும் வழிகாட்டுதலும் அவர்களுக்கு தெளிவுபடுத்தல்களை வழங்குதலும்.

(ii) குடியரசின் நல்லாட்சிக்கான நெறிப்படுத்தலுக்கும் இந்நல்லாட்சி தொடர்பிலான ஆணையிடலுக்கும் கொள்கை உருவாக்கத்துக்கும் அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றும் போது அமைச்சரவைக்கும் அமைச்சரவை உபகுழுக்களுக்கும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பில் தெளிவானதும் இயைபுள்ள சகல விடயங்கள் தொடர்பாகவும் முறையான புரிந்துணர்வுடன் தீர்மானங்களை எடுப்பதை எளிதாக்கும் வகையில் இந்த விஞ்ஞாபனங்கள் சம்பந்தப்பட்ட சட்ட மற்றும் கொள்கை ரீதியாக எழும் உட்சிக்கல்களை ஆழமாக ஆராய்ந்து அதிமேதகைய சனாதிபதி அவர்களுக்கும் அமைச்சரவைக்கும் அமைச்சரவை உபகுழுக்களுக்கும் விடயங்களை முன்வைத்தல்.

(iii) இயைபுள்ள அமைச்சர்களின் அவதானிப்புரைகளைப் பெறுவதன் பொருட்டு அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தொடர்புபடுத்துதல்.

(iv) அமைச்சரவை விஞ்ஞாபனங்களை பரிசீலனை செய்ததன் பின்னர் அமைச்சரவை கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரலில் அவற்றை சேர்த்தல்.

(v) அமைச்சரவை மற்றும் அமைச்சரவை உபகுழு கூட்டங்களுக்குத் தேவையான உதவிச் சேவைகள் அனைத்தையும் வழங்குதல்.

(vi) அமைச்சரவை விஞ்ஞாபனங்களை இயைபுள்ள அவதானிப்புரைகளுடன் பரிசீலனை செய்வதன் பொருட்டு அமைச்சரவைக்கும் அமைச்சரவை உபகுழுக்களுக்கும் சமர்ப்பித்தல்.

(vii) விஞ்ஞாபனமானது சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சினால் மாத்திரமன்றி இந்த விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரிப்புகளை நடைமுறைப்படுத்து வதற்கு பல்வேறுபட்ட வழிகளில் தொடர்புபடும் நிறுவனங்களினால் நிறை வேற்றப்பட வேண்டிய பொறுப்புக்கள் தொடர்பில் அறிந்து கொள்ளும்வகை யில் தேவையான விபரங்களையும் உள்ளடக்கி அமைச்சரவைக் கூட்டங்க ளுக்கான அத்துடன் அமைச்சரவை உபகுழு கூட்டங்களுக்கான தீர்மானங் களை மும்மொழிகளிலும் (சிங்களம் / தமிழ் மற்றும் ஆங்கிலம்) தயாரித்த லும் (ஒரே தடவையில் சிங்களம் / தமிழ் மொழிகளில் மொழி பெயர்ப் பதற்கு இயலுமாகும் வகையில் முதலில் ஆங்கில மொழியில் தயாரிக்கப் படும்.) இந்த தீர்மானங்கள் உள்ளடக்கப்பட்ட நிகழ்ச்சிக் குறிப்புகளை மாண்பு மிகு அமைச்சர்களுக்கும் இயைபுள்ள அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் பிற இயைபுள்ள அதிகாரபீடங்களுக்கும் தொடர்புபடுத்துதலும்.

(viii) விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய அமைச்சரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தொடர் நடவடிக்கைகள் எடுத்தல்.

(ix) அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு எதிராக அல்லது வேறு விதத்தில் அமைச்சரவையை பிரதிவாதியாகக் குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும் பொருட்டுத் தேவைப்படும் தகவல்களை சட்டமா அதிபருக்கு வழங்குதல்.

(x) அதிமேதகைய சனாதிபதியினால் அல்லது அமைச்சரவையினால் விதித்துரைக்கப்படும் பிற அத்தகைய ஏதேனும் பணிகளை நிறைவேற்றுதல்.

## 2. அமைச்சரவை அலுவலகமும் அதன் பணிகளும்

அமைச்சரவை அலுவலகமானது குடியரசு அரசாங்கத்தின் நல்லாட்சியின் நெறிப்படுத்தலுக்கும் இந்நல்லாட்சி தொடர்பிலான ஆணையிடலுக்கும் உரியதாக அரசியலமைப்பின் மூலம் அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒத்துழைப்புச் சேவைகளை வழங்குவதன் பொருட்டு தாபிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்ட அரசியலமைப்பின் 50(1) ஆவது உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அதிமேதகைய சனாதிபதியினால் நியமனம் செய்யப்படும் அமைச்சரவைச் செயலாளரானவர் அமைச்சரவை அலுவலகத்தின் தலைவராகக் கடமையாற்றுகின்றார்.
அதிமேதகைய சனாதிபதியின் பணிப்புக்கு உட்பட்டு, அதிமேதகைய சனாதிபதியினால் அல்லது அமைச்சரவையினால் கையளிக்கப்படும் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கு அமைச்சரவை செயலாளருக்கு ஒத்துழைப்பு நல்குவது இந்த அலுவலகத்தின் பொறுப்பாகும்.

இதற்கமைவாக அமைச்சரவை அலுவலகத்தின் பிரதான பணிகள் பின்வருமாறாகும் :

## 2.1 **அமைச்சரவைக் கூட்டங்களுக்குரிய பணிகள்** :

2.1.1 அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதன் பொருட்டு அமைச்சுக்கள் ஒவ்வொன்றினாலும் இந்த அலுவலகத்திற்கு அனுப்பப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், அமைச்சரவை உபகுழுக்களின் அறிக்கைகள், அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்குரிய செயலாற்றுகை அறிக்கைகள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்குரிய ஆண்டறிக்கைகள், கணக்குகள் என்பன உரிய வழிகாட்டல்களுக்கும் இந்த நோக்கத்திற்காக அமைச்சரவை அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்துரை களுக்கும் அமைவாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா என்பது பற்றி பரிசீலனை செய்து குறித்த ஆவணங்கள் இந்த அலுவலகத்தினால் பொறுப்பேற்கப்படும்.

2.1.2 இவ்வாறு பொறுப்பேற்கப்படும் சகல அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கும் தனிவேறான இலக்கங்கள் வழங்கப்படுவதோடு, இந்த அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்படும் தனிவேறான இலக்கத்தின் கீழ் அவை அமைச்சரவை அலுவலகத்தில் பதிவு செய்யப்படும். இவ்வாறு பதிவு செய்யப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் ஏற்புடைத்தானவாறு அவதானிப்புரைகளைப் பெறுவதன் பொருட்டு மாண்புமிகு அமைச்சர்களுக்கு தொடர்புபடுத்தப்படும் .

2.1.3 வழக்கமாக அடுத்துவரும் வாரத்தில் நடாத்தப்படவுள்ள அமைச்சரவை கூட்டத்திற்கான நிகழ்ச்சிநிரல் வாரத்தின் புதன்கிழமையன்று தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படுவதுடன், இந்த நிகழ்ச்சி நிரலானது அதில் உள்வாங்கப்பட்டுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனங்களுடனும் கடந்த அமைச்சரவை கூட்டத்திற்கான வரைவு நிகழ்ச்சிக் குறிப்புடனும் வெள்ளிக்கிழமை அல்லது அதற்கு முன்னர் மாண்புமிகு அமைச்சர்களுக்கு கொண்டுசென்று கையளிக்கப்படும்.

2.1.4 மாண்புமிகு அமைச்சர்களுக்கு அடுத்தவாரத்திற்குரிய அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் கையளிக்கப்பட்டதன் பின்னர், அமைச்சரவை கூட்டம் நடாத்தப்படவுள்ள திகதிவரை அந்தந்த அமைச்சுக்களினால் அமைச்சரவை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்க ளிலிருந்து அதிமேதகைய சனாதிபதி அவர்களின் அறிவுறுத்தலுக்கமைவாக விசேட நிலைமைகளின் கீழ் அமைச்சரவையினால் உடனடியாக பரிசீலனை செய்யப்பட வேண்டுமெனக் கருதப்படுபவைகளுமான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் உள்ளடக்கப்பட்ட குறைநிரப்பு நிகழ்ச்சி நிரலொன்று தயாரிக்கப்பட்டு அது அமைச்சரவையினால் பரிசீலனை செய்யப்படுவதன் பொருட்டு அமைச்சரவைக் கூட்டம் நடாத்தப்படும் போது சமர்ப்பிக்கப்படும்.

2.1.5 அதேபோன்று விடயத்திற்குப் பொறுப்பான மாண்புமிகு அமைச்சர்களினால் அதிமேதகைய சனாதிபதியின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு, விசேட மற்றும் அவசர விடயங்கள் தொடர்பிலான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் அமைச்சரவைக் கூட்டம் நடாத்தப்படும் சந்தர்ப்பத்தில் அமைச்சரவை யினால் பரிசீலனை செய்யப்படுவதற்காக அட்டவணைப்படுத்தப்படும்.

2.1.6 இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் சகல அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் தொடர்பில் செம்மையாக இயைபுள்ள சகல விடயங்களின் தொடர்பிலும் சரியான புரிந்துணர்வுடன் தீர்மானம் எடுப்பதை இயலுமாக்கும் விதத்தில், இந்த விஞ்ஞாபனங்கள் சம்பந்தப்பட்ட சட்ட மற்றும் கொள்கை ரீதியாக எழும் உட்சிக்கல்களை ஆழமாக ஆராய்ந்து அமைச்சரவைக்கும் அமைச்சரவை உபகுழுக்களுக்கும் விடயங்களை சமர்ப்பிப்பதும்கூட அமைச்சரவை செயலாளரினால் மேற்கொள்ளப்படுவதோடு, அதற்காக ஒத்துழைப்பு நல்குவது இந்த அலுவலகத்தினால் நிறைவேற்றப்படும் முக்கிய பணியொன்றாகும்.

2.1.7 அமைச்சரவை கூட்டம் நடாத்தப்பட்டதன் பின்னர், நாட்டு மக்களினால் அறிந்து கொள்ளப்பட வேண்டிய முக்கியமான அமைச்சரவைத் தீர்மானங்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையொன்று அன்றைய தினமே தயாரிக்கப்பட்டு அது ஊடகங்களுக்கு வழங்கப்படுவதற்காக அமைச்சர வையின் பேச்சாளர்களாக செயலாற்றும் மாண்புமிகு அமைச்சர்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும். (ஆயினும், அடுத்த வாரம் நடைபெறுகின்ற அமைச்சரவைக் கூட்டத்தில்

உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் மாத்திரம் நடைமுறைப்படுத்த வேண்டிய சில அமைச்சரவைத் தீர்மானங்களும் இந்தக் கூட்டத்தில் திருத்தப்படுமெனக் கருதப்படும் தீர்மானங்களும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படமாட்டாது.)

2.1.8 அமைச்சுக்கள் ஒவ்வொன்றினாலும் சமர்ப்பிக்கப்படும் விஞ்ஞாபனங்கள் பற்றி அமைச்சரவையினால் எடுக்கப்படும் தீர்மானங்களிலிருந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் கருதப்படும் விடயங்களுக்குரிய வரைவுத் தீர்மானங்கள் துரிதமாக "பெக்ஸ்" மூலம் இயைபுள்ள அமைச்சுகளுக்கு அனுப்பப்படும்.

2.1.9 அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் உள்ளடக்கப்பட்ட நிகழ்ச்சி குறிப்பு தயாரிக்கும் பணியானது அமைச்சரவைக் கூட்டம் முடிவுற்றவுடன் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதோடு, இது மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு (தமிழ் மொழிபெயர்ப்பு தாமதமடைவதனைத் தவிர்ப்பதற்காக முதலில் ஆங்கில மொழியில் தயாரிக்கப்படுகின்றது.) அடுத்தவார அமைச்சரவைக் கூட்டத்துக்கான நிகழ்ச்சிநிரலும் அதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் மாண்புமிகு அமைச்சர்களுக்கு அடுத்துவரும் வெள்ளிக்கிழமை அல்லது அதற்கு முன்னர் கொண்டு சென்று கையளிக்கப்படும்

2.1.10 அடுத்துவரும் அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவையினால் முன்னைய கூட்டத்திற்கான தீர்மானங்கள் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர், அமைச்சரவை அலுவலகத்தினால் மும்மொழிகளிலும் அவை தயாரிக்கப்பட்டு, இத்தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ள இயைபுள்ள அமைச்சுக்களுக்கும் பிற அரசாங்க நிறுவனங்களுக்கும் தொடர்புபடுத்தப்படும்.

### 2.2 **அமைச்சரவை உபகுழுக் கூட்டங்களுக்குரிய பணிகள்** :

விடயங்கள் ஒவ்வொன்று தொடர்பிலும் மாண்புமிகு அமைச்சர்களினால் பொதுவாக தனித்தனியாக அல்லது சில சந்தர்ப்பங்களில் கூட்டு விஞ்ஞாபனங்களாகச் சமர்ப்பிக்கப்படுகின்ற பிரேரிப்புகள் சம்பந்தமாக முதலில் தேவையானவாறு சிரேட்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் ஆழமாக ஆராய்ந்து, அமைச்சரவைக்கு சிபாரிசுகளைச் சமர்ப்பிப்பதற்கு இயலச் செய்யும் வகையில் அந்தந்த விடயங்களுக்கு ஏற்புடைத்தானவாறு மாண்புமிகு அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை உபகுழுக்கள் அமைச்சரவைத் தீர்மானங்களின் மூலம் தாபிக்கப்பட்டுள்ளன. இந்த உபகுழுக்களின் பணிகளை ஒருங்கிணைப்பதும் முக்கியமாக தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுவுக்குரிய பணிகளைச் செய்வதும் அமைச்சரவை அலுவலகத்தின் தலைமையில் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.3 **பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து சிபாரிசுகளைச் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையினால் நியமனம் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் குழுக்களுக்குரிய பணிகள் :**

அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்குரிய விடயங்கள் தொடர்பில் மேலும் ஆராய்ந்து, சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் குழுக்களுடன் இணைந்து இயைபுள்ள அறிக்கைகளை உரிய திகதியன்று பெற்றுக் கொண்டதன் பின்னர், அமைச்சரவையினால் பரிசீலனை செய்யப்படுவதற்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பது அமைச்சரவை அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பாகும்.

2.4 **அதிமேதகைய சனாதிபதியினால் அல்லது அமைச்சரவையினால் கையளிக்கப்படும் விசேட பணிகள்** :

அதிமேதகைய சனாதிபதியினாலும் அமைச்சரவையினாலும் அமைச்சரவைச் செயலாளருக்கு காலத்துக்குக் காலம் கையளிக்கப்படும் விசேட பணிகளுக்குரிய கடமைகளையும் பொறுப்புக்களையும் துரிதமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒத்துழைப்பை அமைச்சரவைச் செயலாளருக்கு வழங்குவது அமைச்சரவை அலுவலகத்தின் பணியாகும்.

2.5 **அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் பல்வேறுபட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் தொடர்பிலான வழிகாட்டல்களை வழங்குதல் :**

அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல் அத்துடன் இந்த விஞ்ஞாபனங்களை அமைச்சரவை அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் சம்பந்தமாக ஏற்புடையதாகும் வழிகாட்டல்களையும் அறிவுறுத்துரைகளையும் காலத்துக்கு காலம் வழங்குவது அமைச்சரவை அலுவலகத்தின் பொறுப்பொன்றாகும் .

2.6 **விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய அமைச்சரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான தொடர் நடவடிக்கைகள் :**

அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களை அடிப்படையாகக் கொண்டு, அமைச்சரவையினால் எடுக்கப்படும் தீர்மானங்களில் விசேட முக்கியத்துவத்தைக் கொண்ட தீர்மானங்கள் அவ்வாறே உரிய காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிசெய்யும் நோக்குடனும் இந்தத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும்போது எழும் பிரச்சினைகள் எதுவுமிருப்பின் அது தொடர்பில் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுவரும் நோக்குடனும் அமைச்சரவை அலுவலகத்தினால் இந்த தீர்மானங்களின் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

2.7 **அமைச்சுகளுடனும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுடனும் நெருங்கிய கூட்டிணைப்பினைப் பேணுதல் :**

அமைச்சரவை அலுவலக பணிகளுக்கு உரியதான விடயங்கள் சம்பந்தமாக சனாதிபதி செயலகம், நிதி அமைச்சு உட்பட ஏனைய சகல அமைச்சுக்களுடனும் அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்களுடனும் அதேபோன்று அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, முன்னைய தேசிய சம்பளங்கள் ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம் போன்ற தாபனங்களுடனும் நெருங்கிய கூட்டிணைப்பினை அமைச்சரவை அலுவலகமானது பேணி வருகின்றது.

3. **அமைச்சரவை அலுவலகத்தின் பல்வேறுபட்ட பிரிவுகளும் அவற்றுக்கு கையளிக்கப்பட்டுள்ள பணிகளும் :**

அமைச்சரவை அலுவலக பணிகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்வதற்கு அலுவலகத்தில் பின்வரும் விதத்தில் பல்வேறு பிரிவுகள் தாபிக்கப்பட்டுள்ளதோடு, இந்த பிரிவுகளுக்கு உரிய கடமைகள் கையளிக்கப்பட்டு மிகவும் பயனுள்ளதாகவும் வினைத்திறனுடனும் நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3.1 **விஞ்ஞாபனப் பிரிவு :**

இந்தப் பிரிவுக்கு பின்வரும் பணிகள் கையளிக்கப்பட்டுள்ளன :

(i) அமைச்சுக்களிலிருந்து கிடைக்கப்பெறும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பில் அவற்றின் பிழையற்றதன்மை பற்றி முதலில் சரிபார்த்ததன் பின்னர் அமைச்சுக்கள் ஒவ்வொன்றுக்குமாக குறித்தொதுக்கப்பட்டுள்ள இலக்கங்களின் கீழ் பதிவு செய்தல்.

(ii) பதிவு செய்யப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் / குறிப்புகள் தொடர்பில் பூர்வாங்க ஆய்வின் பின்னர், அது நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கி அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் இந்த விஞ்ஞா பனங்களிலுள்ள பிரேரிப்புகள் நேரடியாக ஏற்புடையதாகும் அமைச்சுக்களின் மாண்புமிகு அமைச்சர்களின் அவதானிப்புரைகளை பெறுவதற்காக தொடர்புபடுத்துதல்.

(iii) அமைச்சரவை செயலாளரின் அறிவுறுத்துரைகள் மற்றும் வழிகாட்டல் மீது, அமைச்சரவை கூட்டங்களுக்கும் உபகுழுக் கூட்டங்களுக்குமான நிகழ்ச்சி நிரல்களையும் குறைநிரப்பு நிகழ்ச்சி நிரல்களையும் தயாரித்தல்.

(iv) மாண்புமிகு அமைச்சர்களின் இலகு பரிசீலனைக்காக மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டும் முன்னைய கூட்டத்திற்கான வரைவுத் தீர்மானங்கள் உள்ளடக்கப்பட்ட நிகழ்ச்சிக் குறிப்பு, அடுத்த அமைச்சரவைக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் நிகழ்ச்சிநிரல் என்பன உள்ளடக்கப்பட்ட கோவைகளைத் தயாரித்தல்.

(v) மேற்குறிப்பிட்டவாறு தயாரிக்கப்படுகின்ற விஞ்ஞாபனங்களையும் நிகழ்ச்சி நிரலையும் முன்னைய கூட்டத்திற்கான வரைவு நிகழ்ச்சிக் குறிப்பையும் அதிமேதகைய சனாதிபதிக்கும் மாண்புமிகு பிரதம அமைச்சருக்கும் அமைச்சரவையின் மாண்புமிகு அமைச்சர்களுக்கும் கொண்டு சென்று கையளித்தல்.

(vi) அமைச்சரவையினால் நியமனம் செய்யப்படும் திணைக்களத் தலைவர்களின் நியமனங்கள் தொடர்பிலான நியமனக் கடிதங்களை வழங்குவதற்கு செயலாளருக்கு ஒத்தாசை நல்குதல்.

(vii) உறுதிப்படுத்தப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள் உரிய அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் ஏனைய அதிகாரபீடங்களுக்கும் கொண்டு சென்று கையளித்தல்.

3.2 **நிகழ்ச்சிக் குறிப்புகளைத் தயாரித்தல் மற்றும் மொழிபெயர்ப்புப் பிரிவு:**

அமைச்சரவை அலுவலகத்தின் இறுதி செயற்பாடாக கருதக்கூடிய அமைச்சரவைக் கூட்டங்களில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் உள்ளடக்கிய அமைச்சரவைக் கூட்ட நிகழ்ச்சிக் குறிப்பை மும்மொழிகளிலும் தயாரிப்பதற்கு இந்தப் பிரிவின் பங்களிப்பு பெறப்படுகின்றது. இந்தப் பணிகளை மேற்கொள்கின்ற போது இந்த பிரிவின் உத்தியோகத்தர்கள் அமைச்சரவை செயலாளரினதும் அமைச்சரவை அலுவலகத்தின் மேலதிக செயலாளர்களினதும் நேரடி மற்றும் நெருங்கிய கண்காணிப்பின் கீழ் செயலாற்றுகின்றனர்.

3.3 **கணனிப் பிரிவு:**

இந்தப் பிரிவினால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. :

(i) அமைச்சரவைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சிக் குறிப்புகள், அமைச்சரவை உபகுழு கூட்டங்களுக்கான நிகழ்ச்சிக் குறிப்புகள், அமைச்சரவைக்கும் அமைச்சரவை உபகுழுக்களுக்கும் சமர்ப்பிக்கப்படும் பிற அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் போன்றவற்றை மும்மொழிகளிலும் கணனி மயப்படுத்துதல்.

(ii) பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான அமைச்சரவைத் தீர்மானங்களும் ஏனைய உரிய தகவல்களும் அமைச்சரவை அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடுதல்.

(iii) கடந்த அமைச்சரவை தீர்மானங்கள் தொடர்பிலான பொழிப்புகளையும் தரவுகளையும் உள்ளடக்கிய கோவைகளை உள்ளக உபயோகத்திற்காக மென்பொருள் பிரதிகளாக பேணுதல்.

3.4 **தாபன மற்றும் சேவைப் பிரிவு :**

அலுவலகத்தின் பணிகளை வினைத்திறனுடனும் முறையாகவும் நிறைவேற்று வதற்குத் தேவைப்படும் சகல உதவிச் சேவைகளையும் வசதிகளையும் வழங்கும் பிரிவாக தாபன மற்றும் சேவைப் பிரிவு தொழிற்படுகின்றது.

இந்தப் பிரிவுக்கு பின்வரும் பணிகள் கையளிக்கப்பட்டுள்ளன:

(i) நாளாந்த கடித தொடர்பாடலுக்கு உரியதான பணிகள்;

(ii) அலுவலகப் பராமரிப்பு மற்றும் தொழிற்பாட்டுப் பணிகள்;

(iii) அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான கடித விநியோகம்;

(iv) பதவியினர்களின் சுயவிபரக்கோவை மற்றும் அது தொடர்பிலான சகல தாபன மற்றும் நிருவாக நடவடிக்கைகள்;

(v) அலுவலகத்திற்கு பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குகை தொடர்பிலான கொள்வனவு நடவடிக்கைகள்;

(vi) போக்குவரத்து வசதிகள், (தகவல்களை அனுப்புதல்) மற்றும் நலனோம்பல் சேவைகளை வழங்குதல்; அத்துடன்

(vii) உத்தியோகத்தர்களை பயிற்சிக்காக தொடர்புபடுத்துதல்.

3.5 **கணக்குப் பிரிவு :**

இந்தப் பிரிவுக்குப் பின்வரும் பணிகள் கையளிக்கப்பட்டுள்ளன :

(i) அலுவலகத்தின் கணக்குப் பணிகள் யாவற்றையும் தொழிற்படுத்துதலும் அறிக்கையிடுதலும்

(ii) அலுவலகத்திற்குத் தேவையான கட்டுநிதியைப் பெற்றுக் கொள்தலும் வங்கிக் கணக்குகளைப் பேணுதலும்;

(iii) திறைசேரியினால் கோரப்படும் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்;

(iv) பதவியணியினருக்கு சம்பளங்களையும் படிகளையும் வழங்குதலும் அதற்கு நேரொத்த பணிகளும்;

(v) வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு செயலாளருக்கு ஒத்துழைப்பு நல்குதல்;

(vi) நுகர்வுப்பொருட்கள் மற்றும் மூலதனச் சொத்துகள் கொள்வனவுக்கு உரியதான விடயங்கள்;

(vii) கணக்காய்வு விசாரணைகளுக்குரிய தகவல்களை செயலாளருக்கு வழங்குதல்.

## 4. 2015 ஆம் ஆண்டில் அமைச்சரவை அலுவலகத்தின் செயலாற்றுகை

### 4.1 அமைச்சரவைக் கூட்டங்களுக்குரிய பணிகள் :

4.1.1 2015 ஆம் ஆண்டில் ஆட்சிக்குவந்த இரண்டு (02) அரசாங்கங்களின் கீழ் அமைச்சரவையின் ஐந்து (05) விசேட கூட்டங்களும் ஆடங்கலாக மொத்தம் 44 அமைச்சரவைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இதில் 28 கூட்டங்கள் 2015 சனவரி மாதம் 08 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட சனாதிபதி தேர்தலின் பின்னர் ஆட்சிக்குவந்த அரசாங்கத்தின்* கீழும் 16 கூட்டங்கள் 2015 ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட பாராளுமன்ற பொதுத்தேர்தலின் பின்னர் ஆட்கிக்குவந்த புதிய அரசாங்கத்தின்** கீழும் நடாத்தப்பட்டன. அமைச்சரவையின் தீர்மானங்களை எதிர்பார்த்து பல்வேறு அமைச்சுக்களினால் 2,038 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் 2015 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டன. (2015-01-08 ஆம் திகதியிலிருந்து 2015-08-17 ஆம் திகதிவரை இருந்த அமைச்சுக்களின் கீழும் 2015 செப்ரெம்பர் மாதத்திலிருந்து செயற்பட்ட அமைச்சுக்களின் கீழும் அமைச்சுக்கள் ஒவ்வொன்றி னாலும் 2015 ஆம் ஆண்டில் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை I(அ) மற்றும் I(ஆ) இணைப்புகளில் காட்டப்பட்டுள்ளது.) */** 2015 ஆம் ஆண்டில் ஆட்சிக்குவந்த இரண்டு அரசாங்கங்களின் கீழ் அமைச்சரவையின் உறுப்பினர்களாக செயலாற்றிய அமைச்சர்களின் பெயர்பட்டியல் இணைப்பு II(அ) மற்றும் II(ஆ) என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன.

4.1.2 இந்த விஞ்ஞாபனங்கள் சம்பந்தமான அவதானிப்புரைகளை இயைபுள்ள அமைச்சுகளிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சரவைக்கு விடய முன்வைப்புகளை செய்வதற்கு அமைச்சரவைச் செயலாளரினாலும் சிரேட்ட உத்தியோகத் தர்களினாலும் இந்த விஞ்ஞாபனங்கள் தொடர்புபட்ட சட்ட மற்றும் கொள்கைப் பின்னணி பற்றியும் இந்தப் பிரேரிப்புகளினால் எழும் உட்சிக்கல்கள் பற்றியும் ஆழமாக ஆராயப்பட்டன.

4.1.3 அமைச்சரவையினால் கலந்துரையாடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞா பனங்களுக்கு உரியதானவாறு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் உள்ளடக்கப்பட்ட நிகழ்ச்சிக் குறிப்புகள் இந்த அலுவலகத்தினால் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு மாண்புமிகு அமைச்சர்களுக்கும் இயைபுள்ள தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ள அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் ஏனைய இயைபுள்ள நிறுவனங்களுக்கும் தொடர்புபடுத்தப்பட்டன .

**அட்டவணை 1: அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு விடயங்களுக்கும் அமைவாக தயாரிக்கப்பட்ட வகுப்பீட்டு பொழிப்பு**

| வகுதி | விஞ்ஞாபனத்தின் எண்ணிக்கை |
|---|---|
| கொள்கை சார்ந்த விடயங்கள் | 1,120 |
| சட்டவாக்கம் பற்றிய விடயங்கள் | 80 |
| அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக அமைச்சரவையினால் நிறைவேற்றப்பட வேண்டிய தாபனப்பணிகள் | 601 |
| கொள்வனவு விடயங்கள் | 116 |
| ஆண்டறிக்கைகள் | 121 |
| **மொத்தம்** | **2,038** |

2015 ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட பாராளுமன்ற பொதுதேர்தலுக்கு முன்னர் இறுதியாக அமைச்சரவைக் கூட்டமொன்று நடாத்தப்பட்ட 2015 ஆகஸ்ட் 05 ஆம் திகதியின் பின்னர் கிடைக்கப்பெற்ற அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் புதிய அமைச்சரவையின் உரிய அமைச்சரின் தற்றுணிபின்பேரில் மீளச் சமர்ப்பிப்பதற்கு அல்லது அதற்குப் பொருத்தமான தீர்மானமொன்று எடுப்பதற்கு இயலுமாகும் வகையில் உரிய அமைச்சுகளுக்கு மீள அனுப்பி வைக்கப்பட்டன.

4.2 **அமைச்சரவை உபகுழுக்களுக்குரிய பணிகள் :**

அமைச்சரவையின் தீர்மானமெடுக்கும் செயற்பாட்டினை எளிதாக்கும் பொருட்டு திட்டவட்டமான துறைகள் அல்லது விடயங்கள் சம்பந்தமாக பொருத்தமான சிபாரிசுகளைச் சமர்ப்பிக்கும் பொருட்டு பின்வரும் அமைச்சரவை உபகுழுக்கள் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டது:

(அ) தேசிய கொள்கை பற்றிய அமைச்சரவை உபகுழு;

(ஆ) பொருளாதார கொள்கை பற்றிய அமைச்சரவை உபகுழு;

(இ) தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழு;

(ஈ) சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை உபகுழு;

(உ) கொள்வனவு நடவடிக்கைகள் தொடர்பிலான அமைச்சரவை உபகுழு;

(ஊ) வாழ்க்கைச் செலவு பற்றிய அமைச்சரவை உபகுழு; அத்துடன்

(எ) கல்வி பற்றிய அமைச்சரவை உபகுழு.

(அ) **தேசிய கொள்கை பற்றிய அமைச்சரவை உபகுழு:**

இந்த உபகுழுவுக்கு பின்வரும் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தது.

(i) அரசாங்கத்தின் தேசிய கொள்கைக்குரிய விடயங்கள் பற்றி அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்குதல்;

(ii) அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் ஊடாக சமர்ப்பிக்கப்படும் பிரேரிப்புகள் தேசிய கொள்கைக்கு அமைவானதெனவும் அரசாங்க அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னுரிமைக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்துதல்; அத்துடன்

(iii) மாகாண சபைகள் அவற்றின் அதிகாரங்களை பிரயோகிக்கும் போது அவை தேசிய கொள்கைக்கு அமைவாக செயலாற்றுகின்றமையை உறுதிப்படுத்தும் பொருட்டு ஒருங்கிணைப்பு வழிமுறையொன்றை வகுத்தமைத்தல்.

இந்த உபகுழுவின் கட்டமைப்பு பின்வருமாறாகும்:

* அதிமேதகைய சனாதிபதி - (தலைவர்);
* பிரதம அமைச்சர்;
* வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்;
* நிதி அமைச்சர்;
* மின்வலு, எரிசக்தி அமைச்சர்;
* சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்;
* நெடுஞ்சாலைகள், உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்; அத்துடன்
* நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர்.

வேறு எவரேனும் அமைச்சர் ஒருவருக்கு அவருடைய அமைச்சின் / அமைச்சுக்களின் விடயநோக்கெல்லைக்குள் வரும் விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடப்படும் சந்தர்ப்பத்தில் அதில் கலந்துகொள்ளுமாறு உபகுழுவினால் அழைப்பு விடுக்கப்படலாம்.

இந்த உபகுழுவுக்கு ஒத்தாசை நல்கும் பொருட்டு பின்வரும் சிரேட்ட உத்தியோகத்தர்கள் இனங்காண்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது:

இந்த அமைச்சரவை உபகுழுவினால் அதற்கு ஒத்தாசை நல்கும் பொருட்டு அதிமேதகைய சனாதிபதியின் சிரேட்ட ஆலோசகர்கள், மாண்புமிகு பிரதம அமைச்சரின் சிரேட்ட ஆலோசகர்கள், அமைச்சுச் செயலாளர்களில் இருந்து உத்தியோகத்தர்கள் குழுவொன்று கண்டறியப்பட்டுள்ளது. கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் இந்தக் குழுவின் செயலாளராக / கூட்ட அழைப்பாளராக செயலாற்றுதல் வேண்டும்.

(ஆ) **பொருளாதார கொள்கை பற்றிய அமைச்சரவை உபகுழு**:

2015-09-22 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் **பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சர்கள் குழு** தாபிக்கப்படும் வரை இந்த உபகுழு செயற்பட்டதோடு, அதற்கு பின்வரும் பொறுப்புகள் கையளிக்கப்பட்டிருந்து:

(i) அமைச்சரவை விஞ்ஞாபனங்களில் குறிப்பிடப்படும் பொருளாதார நடவடிக்கைகள், நிதிக் கொள்கைகள், அரசாங்க நிதி நடவடிக்கைகள் முதலியனவற்றுக்குரிய விடயங்களை ஆராய்ந்து, அமைச்சர வைக்குச் சிபாரிசுகளை சமர்ப்பித்தல்;

(ii) தேசிய முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களையும் அரசாங்க முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களையும் ஒழுங்கு செய்யும் போது வழிகாட்டல்களை வழங்குதலும் தனியார் துறையின் முதலீட்டுக்கான வசதிகளை ஏற்பாடு செய்தலும்;

(iii) பொருளாதார மற்றும் நிதி தாக்கங்கள் தொடர்பிலான பிரேரிப்புகள் சம்பந்தமாக அமைச்சரவைக்கு சிபாரிசுகளை சமர்ப்பித்தல்; அத்துடன்

(iv) நாட்டின் முதலீட்டுக்கு / பொருளாதார அபிவிருத்திக்கு நேரடியான தாக்கத்தைச் செலுத்தும் பல்வேறுபட்ட சட்டங்களின் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் மேற்பார்வை செய்தல்.

இந்த உபகுழுவின் கட்டமைப்பு பின்வருமாறாகும்:

* பிரதம அமைச்சர் - (தலைவர்);
* நிதி அமைச்சர்;
* மின்வலு, எரிசக்தி அமைச்சர்; அத்துடன்
* நெடுஞ்சாலைகள், உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

இந்த உபகுழுவுக்கு ஒத்தாசை நல்கும் பொருட்டு பின்வரும் சிரேட்ட உத்தியோகத்தர்கள் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டார்கள்:

* கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள் அமைச்சரின் ஆலோசகர்;

* மாண்புமிகு பிரதம அமைச்சரின் சிரேட்ட ஆலோசகர்;

*	அமைச்சரவைச் செயலாளர்;

*	செயலாளர், நிதி அமைச்சு;

*	செயலாளர், கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள் அமைச்சு; அத்துடன்

*	பிரதம அமைச்சரின் மேலதிகச் செயலாளர் ஒருவர்.

இந்தக் குழுவின் செயலாளராக / கூட்ட அழைப்பாளராக பிரதம அமைச்சரின் செயலாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் சிரேட்ட உத்தியோகத்தர் ஒருவர் செயலாற்றுதல் வேண்டுமெனவும் குழுவின் நோக்கங்களுக்குத் தேவையெனக் கருதும் பிற எந்தவொரு உத்தியோகத்தரினதும் / நிபுணரினதும் சேவையை இந்தக் குழுவினால் பெற்றுக் கொள்ளலாமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

2015-09-22 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்போந்த பொருளாதார கொள்கை பற்றிய அமைச்சரவை உபகுழுவுக்குப் பதிலாக பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சர்கள் குழு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டது.

இதற்கமைவாக, பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான விடயங்கள் சம்பந்தமாக பொருத்தமான சிபாரிசுகளைச் சமர்ப்பிப்பதற்கு பின்வரும் அமைச்சர்கள் இந்த அமைச்சர்கள் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்:

*	மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்க அவர்கள்,
	பிரதம அமைச்சர்,
	தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார
	அலுவல்கள் அமைச்சர் - (தலைவர்);

*	மாண்புமிகு நிமல் சிறிபால த சில்வா அவர்கள்,
	போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர்;

*	மாண்புமிகு ரவூப் ஹக்கீம் அவர்கள்,
	நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்;

*	மாண்புமிகு அநுர பிரியதர்ஷன யாப்பா அவர்கள்,
	அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்;

*	மாண்புமிகு ரவி கருணாநாயக்க அவர்கள்,
	நிதி அமைச்சர்;

*	மாண்புமிகு பாட்டலி சம்பிக்க றணவக்க அவர்கள்,
	மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்;

*	மாண்புமிகு கபீர் ஹஷிம் அவர்கள்,
	அரசாங்க தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்;

*	மாண்புமிகு அர்ஜுன ரணதுங்க அவர்கள்,
	துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சர்;

* மாண்புமிகு சாகல ரத்நாயக்க அவர்கள்,
சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்; அத்துடன்

* மாண்புமிகு மலிக் சமரவிக்ரம அவர்கள்,
திறமுறை அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்.

(இ) **தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழு :**

(i) அரசியலமைப்புக்கு அமைவாக தாபன விடயங்களுக்குரியதாக பின்வரும் தத்துவங்கள் அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டுள்ளன :

* அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள், அவர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் அவர்களை சேவையிலிருந்து நீக்குதல் உட்பட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு உரியதான சகல கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பில் ஏற்பாடுகளைச் செய்தல். (அரசியலமைப்பின் 55 ஆம் உறுப்புரையின் (1) ஆம் துணை உறுப்புரை)

* திணைக்களத் தலைவர்களை நியமித்தல், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள், அவர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் அவர்களை சேவையிலிருந்து நீக்குதல் (அரசியலமைப்பின் 55 ஆம் உறுப்புரையின் (2) ஆம் துணை உறுப்புரை)

இந்த தத்துவங்களை நடைமுறைப்படுத்தும் போது அமைச்சரவைக்கு மிகப் பொருத்தமான தீர்மானங்களை எடுப்பதற்கு இயலுமாகும் வகையில் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்படும் விஞ்ஞாபனங்களை ஆழமாக ஆராய்ந்து அமைச்சரவைக்கு சிபாரிசுகளைச் சமர்ப்பிப்பது தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுவின் பொறுப்பாகும்.

(ii) இதற்கு மேலதிகமாக அமைச்சுக்கள், திணைக்களங்கள் அரசாங்க தொழில்முயற்சிகள், நியதிச்சட்ட நிறுவனங்கள் போன்றவற்றின் வருடாந்த நிருவாக அறிக்கைகள் / செயலாற்றுகை அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் பொருட்டு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக உரிய அமைச்சரவை விஞ்ஞாபனங்களைப் பரிசீலனை செய்து அதற்குரிய சிபாரிசுகளைச் சமர்ப்பிக்கும் பொறுப்பும்கூட 2015 ஆம் ஆண்டில் தாபனவிடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுவுக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(iii) 2015 ஆம் ஆண்டில் 2015 ஆகஸ்ட் 17 ஆம் திகதியன்றுக்கு முன்னர் பின்வரும் அமைச்சர்களை தாபனவிடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழு கொண்டிருந்தது.

* மாண்புமிகு கரு ஜயசூரிய அவர்கள்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சர் - (தலைவர்);

* மாண்புமிகு ரவி கருணாநாயக்க அவர்கள்,
நிதி அமைச்சர்;

* மாண்புமிகு (மருத்துவர்) ராஜித சேனாரத்ன அவர்கள்,
சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்;

* மாண்புமிகு (கலாநிதி) விஜேதாச ராஜபக்ஷ அவர்கள்,
நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர்; அத்துடன்

* மாண்புமிகு அக்கில விராஜ் காரியவசம் அவர்கள்,
கல்வி அமைச்சர்.

2015 ஆகஸ்ட் 17 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட பாராளுமன்ற பொதுத் தேர்தலின் பின்னர் ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கத்தின் கீழ் தாபனவிடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழு பின்வரும் அமைச்சர்களைக் கொண்டிருந்தது.

* மாண்புமிகு (கலாநிதி) விஜேதாச ராஜபக்ஷ அவர்கள்,
புத்தசாசன அமைச்சரும் நீதி அமைச்சரும் - (தலைவர்);

* மாண்புமிகு அநுர பிரியதர்ஷன யாப்பா அவர்கள்,
அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்;

* மாண்புமிகு (மருத்துவர்) ராஜித சேனாரத்ன அவர்கள்,
சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்;

* மாண்புமிகு ரவி கருணாநாயக்க அவர்கள்,
நிதி அமைச்சர்;

* மாண்புமிகு ரஞ்சித் மத்தும பண்டார அவர்கள்,
பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்;

* மாண்புமிகு (திருமதி) தலதா அத்துகோரல அவர்கள்,
வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர்; அத்துடன்

* மாண்புமிகு அக்கில விராஜ் காரியவசம் அவர்கள்,
கல்வி அமைச்சர்.

(iv) திணைக்களத் தலைவர்களை நியமிப்பதற்கான விஞ்ஞாபனங்கள் இந்த அலுவலகத்திற்கு கிடைத்தவுடன் சிபாரிசு செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லையென அல்லது எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு கருதப்படவில்லையென குறித்த உத்தியோகத்தர்கள் சார்ந்த சேவைகளின் நியமன அதிகாரியிடமிருந்தும் நிருவாக அதிகாரபீடத்திடமிருந்தும் அறிக்கைகள் கோரப்பட்டு இந்த விடயம் திணைக்களத் தலைவர்களை நியமிக்கும் போது தகுதிவிதி யொன்றாகப் பரிசீலனை செய்யப்பட்டது.

(v) பல்வேறு அமைச்சுக்களினால் 2015 ஆம் ஆண்டில் தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுவின் விடயநோக்கெல்லைக்குட்பட்ட 601 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் பல்வேறு அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்டி ருந்ததோடு, இந்த விஞ்ஞாபனங்கள் பற்றி கலந்துரையாடுவதற்கு 24 தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அமைச்சரவை உபகுழுவின் சிபாரிசுகள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நோக்கத்திற்காக பின்வரும் உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்று அமைச்சரவை உபகுழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன், இந்த உத்தியோகத்தர்கள் குழு கலந்து கொண்ட 24 கூட்டங்கள் அமைச்சரவை அலுவலகத்தில் நடாத்தப்பட்டுள்ளன.

* அமைச்சரவை செயலாளர்;

* பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின்* செயலாளர் / மேலதிக செயலாளர்; (*

2015-08-17 ஆம் திகதியன்றுக்கு முன்னர் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சு)

* திறைசேரியின் பிரதி செயலாளர்;

* தாபனப் பணிப்பாளர் அதிபதி;

* இணைந்த சேவைகள் பணிப்பாளர் அதிபதி;

* முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் அதிபதி;

* அழைப்பின் பேரில் உரிய அமைச்சுக்களின் உத்தியோகத்தர்கள் (சந்தர்ப்பத்திற்கேற்றவாறு); அத்துடன்

* அமைச்சரவை அலுவலகத்தின் மேலதிக செயலாளர்கள் உட்பட இயைபுள்ள ஏனைய உத்தியோகத்தர்கள்.

அவ்வாறே தேவையான சந்தர்ப்பங்களில் தேசிய சம்பளங்கள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அமைச்சரவை உபகுழுவினால் சமர்ப்பிக்கப்படும் சிபாரிசுகள் அமைச்சரவையினால் பரிசீலனை செய்யப்பட்டு, மேற்போந்த 601 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் சம்பந்தமாக அதன் தீர்மானங்கள் வழங்கப்பட்டுள்ளதோடு, அமைச்சரவை அலுவலகத்தினால் இந்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்து வதற்காக இயைபுள்ள அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் ஏனைய இயைபுள்ள நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள் 53 பேர்களை நியமனஞ் செய்யப்பட்டதோடு, அதற்கான நியமனக் கடிதங்கள் அமைச்சரவைச் செயலாளரினால் வழங்கப்பட்டது.

(ஈ) **சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை உபகுழு:**

புதிதாக சட்டத்தை ஆக்குவதற்கோ அல்லது ஏற்கனவேயுள்ள சட்டங்களைத் திருத்துவதற்கோ அமைச்சரவை அங்கீகாரத்துடன் பாராளுமன்றத்திற்குச் சமரப்பிக்கப்படவுள்ள சட்டமூலங்கள் உள்ளடக்கிய விஞ்ஞாபனங்களை ஆழமாக ஆராய்ந்து, அதன் சிபாரிசுகளை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கும் பொருட்டு பின்வரும் அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை உபகுழுவொன்று 2015 பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டது:

* மாண்புமிகு (கலாநிதி) விஜேதாச ராஜபக்ஷ அவர்கள்,
  நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் - (தலைவர்);

* மாண்புமிகு மங்கள சமரவீர அவர்கள்,
  வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்;

* மாண்புமிகு லக்ஷ்மன் கிரியெல்ல அவர்கள்,
  பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர்; அத்துடன்

* மாண்புமிகு ரவூப் ஹக்கீம் அவர்கள்,
  நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.

2015 ஆகஸ்ட் 17 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட பாராளுமன்ற பொதுத் தேர்தலின் பின்னர் ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கத்தின் கீழ் சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை உபகுழு பின்வரும் அமைச்சர்களைக் கொண்டிருந்தது.

* மாண்புமிகு (கலாநிதி) விஜேதாச ராஜபக்ஷ அவர்கள்,
  நீதி அமைச்சர் - (தலைவர்);

* மாண்புமிகு மங்கள சமரவீர அவர்கள்,
  வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்;

* மாண்புமிகு அநுர பிரியதர்ஷன யாப்பா அவர்கள்,
  அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்;

* மாண்புமிகு சுசில் பிரேமஜயந்த அவர்கள்,
  விஞ்ஞான, தொழினுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்;

* மாண்புமிகு திலக் மாரப்பன அவர்கள்,
  சட்டமும் ஒழுங்கும் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்; அத்துடன்
  (2015 நவெம்பர் மாதம் 09 ஆம் திகதி வரை)

* மாண்புமிகு நவின் திஸாநாயக்க அவர்கள்,
  பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர்.

இந்த உபகுழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதன் பொருட்டு நீதி அமைச்சின் செயலாளரையும் இயைபுள்ள அமைச்சுகளின் பிரதிநிதிகளையும் கொண்ட உத்தியோகத்தர் குழுவொன்று அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டிருந்தது.

சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை உபகுழுவுக்கு 2015 ஆம் ஆண்டில் 40 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. இதற்குரிய சிபாரிசுகள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதோடு, அமைச்சரவைத் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக இயைபுள்ள அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு குறித்த தீர்மானங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

(உ) **கொள்வனவு நடவடிக்கைகள் தொடர்பிலான அமைச்சரவை உபகுழு:**

தேவையற்ற செலவுகளை தவிர்த்துக் கொள்வதற்கும் அரசாங்க கொள்வனவு செயற்பாடு தொடர்பில் பொதுமக்களின் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கும் அரசாங்கத்தின் நிதி முகாமைத்துவம் பற்றிய சிறந்த வழிமுறைகளை பின்பற்றி வெளிப்படையாக கொள்வனவு சம்பந்தமான தீர்மானங்கள் எடுப்பதனை உறுதிப்படுத்தும் பொறுப்பு இந்த உபகுழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ளதோடு, அதன் கட்டமைப்பு பின்வருமாறாகும்:

* அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சர் - (தலைவர்);
* பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர்; அத்துடன்
* நிதி அமைச்சர்; அத்துடன்
* மின்வலு, எரிசக்தி அமைச்சர்.

**இந்த உபகுழுவுக்கு ஒத்தாசை நல்கும் பொருட்டு பின்வரும் சிரேட்ட உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.**

* சனாதிபதியின் செயலாளர் அல்லது அவரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவர்;
* பிரதம அமைச்சரின் செயலாளர் அல்லது அவரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவர்;
* அமைச்சரவை செயலாளர் அல்லது அவரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவர்;
* நிதி அமைச்சின் செயலாளர் அல்லது அவரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவர்;
* பணிப்பாளர் நாயகம், தேசிய வரவுசெலவுத்திட்டம்; அத்துடன்
* பணிப்பாளர் நாயகம், அரசாங்க நிதி.

திறைசேரியின் செயலாளர் அல்லது அவரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் பிரதி செயலாளர் ஒருவர் இந்த உபகுழுவின் செயலாளராக / கூட்ட அழைப்பாளராக செயலாற்றுதல் வேண்டுமெனவும் இந்த உபகுழுவின் நோக்கங்களுக்குத் தேவையெனக் கருதும் பிற எந்தவொரு உத்தியோகத்தரினதும்/ நிபுணரினதும் சேவையை இந்த உபகுழுவினால் பெற்றுக் கொள்ளலாமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஊ) **வாழ்க்கைச் செலவு பற்றிய அமைச்சரவை உபகுழு:**

2015-09-22 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் வாழ்க்கைச் செலவிற்குரியதான விடயங்கள் பற்றி தேவையான சிபாரிசுகளை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கும் பொருட்டு பின்வரும் அமைச்சர்களைக் கொண்ட மேற்போந்த அமைச்சரவை உபகுழுவானது அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டது:

* மாண்புமிகு மலிக் சமரவிக்ரம அவர்கள்,
  திறமுறை அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் - (தலைவர்);
* மாண்புமிகு டபிள்யு.டீ.ஜே.செனெவிரத்ன அவர்கள்,
  தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்;
* மாண்புமிகு ரவி கருணாநாயக்க அவர்கள்,
  நிதி அமைச்சர்;
* மாண்புமிகு பி.ஹரிஷன் அவர்கள்,
  கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சர்;
* மாண்புமிகு அக்கில விராஜ் காரியவசம் அவர்கள்,
  கல்வி அமைச்சர்.

அதேபோன்று கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வாழ்க்கைச் செலவு பற்றிய அமைச்சரவை உபகுழுவின் செயலாளராக / கூட்ட அழைப்பாளராக செயலாற்ற வேண்டுமெனவும் அமைச்சர வையினால் தீர்மானிக்கப்பட்டது.

(எ) **கல்வி பற்றிய அமைச்சரவை உபகுழு:**

தேசிய கல்விக் கொள்கையொன்றை தயாரித்தல், பாடசாலை கல்வி பற்றிய புதிய சட்டமொன்றை தயாரித்தல், தொழினுட்ப மற்றும் தொழிற் கல்வியை விரிவுபடுத்தும் பொருட்டு வழிகாட்டல்களை வழங்குதல், முன்பள்ளிகளுக்கான தேசிய கொள்கையொன்றைத் தயாரிக்கும் பொருட்டு வழிகாட்டல்களை வழங்குதல், பல்கலைக்கழக கல்வியை மீளமைக்கும் செயற்பாட்டிற்குரிய பணிகளை மேற்கொள்தல், கல்வி பற்றிய அரசாங்கத்தின் பொது நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களை எய்தும் பொருட்டு உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற பணிகளை நிறைவேற்றுவதற்காக 2015-10-14 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் இந்த அமைச்சரவை உபகுழுவானது நியமிக்கப்பட்டது.

மாண்புமிகு பிரதம அமைச்சரும் மேலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆறு (06) அமைச்சர்களும் இந்த அமைச்சரவை உபகுழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்:

* மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்க அவர்கள்,
  பிரதம அமைச்சர் - (தலைவர்);

* மாண்புமிகு லக்ஷ்மன் கிரியெல்ல அவர்கள்,
  உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்;

* மாண்புமிகு சுசில் பிரேமஜயந்த அவர்கள்,
  விஞ்ஞான, தொழினுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்;

* மாண்புமிகு மஹிந்த சமரசிங்க அவர்கள்,
  திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சர்;

* மாண்புமிகு அக்கில விராஜ் காரியவசம் அவர்கள்,
  கல்வி அமைச்சர்;

* மாண்புமிகு சாகல ரத்நாயக்க அவர்கள்,
  சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்; அத்துடன்

* மாண்புமிகு ஹரீன் பெர்ணான்டோ அவர்கள்,
  தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்.

4.3 **பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்படு வதற்காக அமைச்சரவையினால் நியமனம் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் குழுக்களுக்குரிய பணிகள் :**

அமைச்சரவைக் கூட்டங்களில் எழுந்த பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் மேலும் ஆராய்ந்து சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையினால் 2015 ஆம் ஆண்டில் அமைச்சர்களைக் கொண்ட 26 குழுக்களும் உத்தியோகத்தர்களைக் கொண்ட 24 குழுக்களும் நியமிக்கப்பட்டதோடு, இத்தகைய குழுக்கள் சமர்ப்பித்த சிபாரிசுகள் உள்ளடக்கப்பட்ட பதின்நான்கு (14) அறிக்கைகள் அமைச்சரவைக்கு தொடர்புபடுத்தப்பட்டு, அதற்கமைவாக எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக இயைபுள்ள அமைச்சுக்களின் செயலாளர் களுக்கும் நிறுவனங்களுக்கும் தொடர்புபடுத்தப்பட்டன.

4.4 **மீயுயர் நீதிமன்றங்களினால் விசாரிக்கப்பட்டுவரும் வழக்கு நடவடிக்கை களுக்குத் தேவைப்படும் தகவல்களையும் அமைச்சரவைத் தீர்மானங்களையும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் :**

அமைச்சரவையை அல்லது அமைச்சரவை செயலாளரை பிரதிவாதியாக்கி உயர்நீதிமன்ற (அடிப்படை உரிமைகள்) விண்ணப்பங்கள் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற (ஆணை) விண்ணப்பங்கள் சிலவற்றின் சத்திய கடதாசிகளில் / மனுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள வெளிப்படுத்தல்கள் சம்பந்தமாக அமைச்சரவை செயலாளரின் அவதானிப்புரைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கோரப்பட்டதோடு, இயைபுள்ள அமைச்சரவை தீர்மானங்களின் பிரதிகளுடன் அது தொடர்பிலான அவதானிப்புரைகளும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன், சட்டமா அதிபர் திணைக்களத்தினால் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக முன்னைய அமைச்சரவைத் தீர்மானங்கள் சம்பந்தமான விரிவான தகவல்களும் அதுசார்ந்த ஆவணங்களும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு துரிதமாக கிடைப்பதற்கு ஆவன செய்யப்பட்டன. 2015 ஆம் ஆண்டினுள் அமைச்சரவை அலுவலகத்தினால் 31 வழக்கு நடவடிக்கைகள் சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் சேர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கமைவாக 2014 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்த 13 வழக்குகளுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

